**ARTICLE 36 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 111–116

# பிற்கால அறஇலக்கியங்களில் குற்றவியல் சிந்தனைகளும் சமூக நீதி நிர்வாகமும்

## Concepts of Criminal Justice and the Administration of Social Justice in Later Didactic Literature

**முனைவர் த. வனிதா தேவி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ ஷங்கர்லால் சுந்தர்பாய் ஷசுன் ஜெயின் மகளிர் கல்லூரி
சென்னை.

## Abstract

Ethical thought forms the foundation for social order and a peaceful way of life. Following the Sangam and post-Sangam eras, a significant number of didactic works emerged in Tamil literature during the later period—specifically between the 14th and 19th centuries. These texts provided the necessary guidelines for maintaining social order and ensuring a harmonious existence. Later ethical works—such as *Neethineri Vilakkam*, *Nanneri*, *Aranericharam*, and Mayuram Vedanayagam Pillai's *Neethinool*—not only emphasize individual morality but also offer nuanced insights into crime prevention, theories of punishment, and the administration of justice within the social framework. The primary objective of this article is to examine, from a multifaceted perspective, the concepts of criminology and the systems of social justice administration embedded in these later ethical literary works.

## ஆய்வுச் சுருக்கம்

மனிதன் வாழக்கூடிய சமுதாயத்தின் ஒழுங்கிற்கும் அமைதியான வாழ்வியல் சூழலுக்கும் அடிப்படையாக விளங்குபவை அறச் சிந்தனைகளே. தமிழ் இலக்கியப் பரப்பில் சங்க காலம் மற்றும் சங்கம் மருவிய காலத்தைத் தொடர்ந்து, பிற்காலத்திலும் குறிப்பாக 14-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில் பல நீதி நூல்கள் தோன்றின. அவை சமூகத்தின் ஒழுங்கிற்கும் அமைதியான வாழ்வியலுக்கும் தேவையான நெறிமுறைகளை வழங்கின. பிற்கால அற இலக்கியங்களான நீதிநெறி விளக்கம், நன்னெறி, அறநெறிச்சாரம், மாயூரம் வேதநாயக பிள்ளையின் நீதிநூல் போன்றவை தனிமனித ஒழுக்கத்தை வலியுறுத்துவதோடு, சமூகம் என்ற அமைப்பில் குற்றத் தடுப்பு, குற்றங்களுக்கான தண்டனைக் கோட்பாடுகள், நீதி நிர்வாகம் ஆகியவற்றையும் நுட்பமாக விளக்குகின்றன. பிற்கால அறஇலக்கியங்களில் பொதிந்துள்ள குற்றவியல் சிந்தனைகளையும் சமூக நீதி நிர்வாக முறைகளையும் பன்முகப் பார்வையில் ஆய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகிறது..

பிற்கால அற இலக்கியங்கள் தனிமனித ஒழுக்கத்தை போதிப்பதோடு நின்றவிடாமல், சமூகத்தில் நடக்கும் குற்றங்கள், அதற்கான காரணங்கள், அதைத் தடுக்கும் வழிமுறைகள், நடுவு நிலைமை, நீதி நிர்வாகம் மற்றும் தண்டனைக் கோட்பாடுகள் போன்றவற்றையும் ஆராய்ந்துள்ளன. பிற்கால அறநூல்களின் துணைகொண்டு,

1.குற்றவியல் மற்றும் குற்றங்களைத் தடுப்பதற்கான சிந்தனைகளை அடையாளம் காணுதல்

2. சமூக நீதி, நிர்வாகம் மற்றும் நடுவுநிலைமையைப் பின்பற்றும் நெறிகள் எவ்வாறு

வலியுறுத்தப்பட்டுள்ளன என்பதை ஆராய்தல்,

3. பிற்கால அறச் சிந்தனைகளைச் சமகாலச் சூழலோடு ஒப்பிட்டுப் பன்முகப் பார்வையில்

விளக்குதல் என்ற நிலைகளில் இவ்வாய்வுக்கட்டுரை அமைகிறது.

## குற்றக் காரணியும் குற்ற உளவியலும்

ஒரு மனிதன் தன் சுயக் கட்டுப்பாட்டை இழக்கும் போதே குற்றச் செயல்களில் ஈடுபடுகிறான் என்று காட்ஃப்ரெட்சன் மற்றும் ஹிர்ஷி தங்கள் நவீன குற்றவியல் கருத்தை முன்வைக்கின்றனர். இவர்கள் முன்வைத்த இச்சிந்தனையைப் பிற்கால அறநூல்கள் விரிவாகப் பேசுகின்றன.

## பேராசையும் அகக் கட்டுப்பாடின்மையும்

மனித மனத்தின் தீய குணங்களுள் முதன்மையானதாகப் பேராசையை அற நூல்கள் குறிப்பிடுகின்றன. குற்றங்கள் உருவாவதற்கு மனிதனின் கட்டுப்பாடற்ற ஆசைகளும் சுயநலமுமே முதன்மைக் காரணம் என்பதை அறநூல்கள் சுட்டுகின்றன. ஆசைக்கு அடிமைப்பட்டவர் மற்றும் ஆசையை அடக்கியாண்டவரின் தன்மை குறித்து நீதிவெண்பா குறிப்பிடுகையில் ஆசைக்கு அடிமைப்பட்டுக்கிடப்பவர் எல்லா உலகங்களுக்கும் குற்றம் இல்லாத நல்ல அடிமைகளாவர். இதனை,

“ஆசைக்கு அடியான் அகிலலோ கத்தினுக்கும்
ஆசற்ற நல்லடியான் ஆவானே –” (நீதிவெ. 12) என்ற பாடல் வழி எடுத்துரைக்கின்றது. அழிவினைத் தரக்கூடிய ஆசையை அறவோர் விரும்பாத தன்மையை அறநெறிச்சாரம்,

“அலைபுனலுள் நிற்பினும் தாமரை ஈன்ற
இலையின்கண் நீர்நிலாது ஆகும் - அலைவில்
புலன்களில் நிற்பினும் பொச்சாப்பு இலரே
மலம்கடிவு ஆளா தவர்க்கு.” (அறநெறி. 148) என்ற பாடலால் விளக்குகின்றது.

## பொறாமையும் சினமும்

கோபம், பொறாமை ஆகியவை மனிதனைச் சட்ட விரோத அல்லது அறத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுத்துகின்றன. நவீன குற்றவியலில் "சுயக் கட்டுப்பாடு கோட்பாடு" (Self-Control Theory) எனக் கூறப்படுவதைப் போல, மனக்கட்டுப்பாடே குற்றத் தடுப்பின் முதல் படி என்பதைப் பிற்கால அற இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

மனிதனை அலைக்கழித்து, அறநெறியிலிருந்து விலக வைக்கும் பல குணங்களுள் பொறாமையும் ஒன்று. பொறாமைச் சொற்களைப் பேசக் கூடாது என்பதை, “அவ்வித்து அழுக்கா(று) உரையாமை முன் இனிதே” என்கிறது இனியவை நாற்பது.

பொறாமைக் குணம் தீமையையே பயக்கும். கல்வியால் பெருமை கொண்டவரைக் கண்டு அவரைப்போல் புகழ் பெற வேண்டும் என எண்ணுவது நன்மை பயக்கும். மாறாக மற்றவரிடம் பொருள் இருப்பதைக் கண்டு நம்மிடம் இல்லையே என வருந்துவதோ பொறாமை கொள்வதோ தீமையே பயக்கும் என்பதை,

“அறமு ளார்கள்போல் அறிஞர் போல்புகழ்
பெறவ ருந்துதல் பெருமை யாயினும்
புறமு ளார்கள் போல் பொருளி லேமென

உறுமவ் வுறுகணே; உறுக ணீயுமே.” (நீதிநூ. 307) என்ற பாடல் வரிகள் விளக்குகின்றன.

பொறாமைக் குணம் கொண்டு பேசுதல் அழிவைத் தரும் என்பதை, “ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு” (கொன்றை. 12) என்ற வரி உணர்த்துகின்றது.

சினம் என்னும் குணம் மனிதனுக்கு எவ்வித நற்பயனையும் தராது. மாறாக அது அழிவிற்கே வழிவகுக்கும். சினத்தால் எதையும் வெற்றி கொள்ள இயலாது. இதை உணர்ந்தே ஔவையும், “கடிவது மற” (ஆத்தி. 32) என்கிறார்.

சினம் கொள்ளுமாறு ஒருவர் குற்றம் செய்தாலும் சினம் கொள்ளாது இருப்பதே வெகுளாமை என்னும் சிறந்த பண்பாகும் என்பதை,

“உள்ளம் கவர்ந்தெழுந்து ஓங்கு சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணம்என்க – வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு” (நன். 8) என்ற வரிகள் விளக்குகின்றன.

## பொய் சாட்சி கூறுதல்

நல்வழியும் நடுவுநிலை தவறி பொய்சாட்சி சொல்பவரின் நிலையை விவரிக்கின்றது. பொய்சாட்சி சொன்னவரின் வீட்டில் பேய் குடிபுகும். வெள்ளை எருக்கும் சப்பாத்தி;க் கள்ளியும் வளரும். மூதேவி புகுந்து நிலையாக வாழ்வாள். பாம்புகள் குடியிருக்கும். இறுதியில் அழிவு ஏற்படும். இதனை,

“வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே - மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரம் சொன்னார் மனை.” (நல். 23) என்ற பாடலால் அறியமுடிகின்றது.

மேலும் ஓரம் சொல்லுதலை, “ஓரம் சொல்லேல்” (ஆத்தி. 108), “மண்ணினின்று மண்ணோரஞ் சொல்ல வேண்டா” (உலக. 9) என்று அறநூல்கள் அறிவுறுத்துகின்றன.

## பிறர் பொருள் கவர்தல்

பிறர்க்கு உரிமையான ஒரு பொருளை அவருக்குத் தெரியாமல் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்வதே களவு எனப்படும். அப்படிப் பிறர்பொருளைக் கவர்ந்து கொள்ள விருப்பப்படலாகாது என்பதை, “கொள்ளை விரும்பேல்” (ஆத்தி. 41) என்ற ஆத்திசூடி பாடல் சுட்டிக்காட்டுகின்றது. களவுத்தொழிலைச் செய்யும் நபரோடு நட்புறவு வைத்துக்கொள்ளக் கூடாது என்பதை, “கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டா” (உலக. 4) என்று கூறி நம்மை எச்சரிக்கை செய்கின்றது.

## சூதாட்டம்

பிறர்க்கு உரிமையான ஒரு பொருளைத் தந்திரமாகச் சூழ்ச்சியினால் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்வதே சூது எனப்படும். அத்தகைய சூதாட்டத்தை விரும்பக்கூடாது, விளையாடவும் கூடாது என்பதை, “சூது விரும்பேல்” (ஆத்தி. 48), “சூதும் வாதும் வேதனை செய்யும்” (கொன்றை. 31)

என்ற வரிகள் அறிவுறுத்துகின்றன. சூதாட்டத்தை விரும்பிய ஒருவன் அடையும் நிலை குறித்து அறநெறிச்சாரம் குறிப்பிடும் போது,

“ ஓதலும், ஓதி உணர்தலும், சான்றோரால்
மேதை எனப்படும் மேன்மையும் - சூது
பொரும்என்னும் சொல்லினால் புல்லப் படுமேல்
இருளாம் ஒருங்கே இவை.” (அறநெறி. 87) என்கிறது. அதாவது சூதாடி என்று ஒருவன் பெயர் பெற்றுவிட்டால் அவன் பெற்ற கல்வி, ஆராய்ச்சி செய்யும் தன்மை, அறிவுடைமை அனைத்தும் இல்லாது போய்விடும். கற்கவோ, ஆராயவோ, அறிவைத் தேடவோ முயலாமல் அறிவு மழுங்கிய நிலையை எய்திவிடுவான்.

## பிறன்மனை விழைதல்

நற்பண்புகளுள் பிறன்இல் விழையாமை என்பது தலையாய பண்பாகும். அறத்தை வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு வாழ்வோர் பிறன் மனையை விரும்பும் செயலைச் செய்யார். தன் மனைவியின் கற்பைப் பெரிதாக நினைக்கும் ஆண்மகன் பிறர் மனைவியரின் கற்பையும் பெரிதென எண்ணி மதிப்பளிக்க வேண்டும். அறம் பொருள் இன்பம் என்ற மூன்றனுள் இன்பத்திற்காகப் பிறன்மனை விரும்பினால் அறத்தையும் பொருளையும் தொலைத்து அவமதிப்பிற்கு ஆளாக நேரிடும். இல்லறத்திற்கு மாறான இத்தகு பண்பை அறஇலக்கியங்கள் கண்டிக்கின்றன. இக்கருத்தையே, “பிறன் மனை புகாமை அறம் எனத் தகும்” (கொன்றை. 61) “கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்” (உலக. 4) என்ற வரிகள் அறிவுறுத்துகின்றன.

ஒருவன் தன் வாழ்நாளில் ஒழுக்கத்தைப் பின்பற்றி, நற்செயல் பல புரிந்து, பெரியோர் பலரால் நெறியுடையோன் எனப் புகழப்படும் தன்மை உடையவனாய் இருந்தாலும், பிறன் மனையை விரும்பிச் சென்றான் என்று பிறரால் பேசப்படுவானாயின் முன்சொன்ன அனைத்துப் புகழ் மொழியும் பழியாய் முடியும் என்பதை,

“அறனும், அறன்அறிந்த செய்கையும், சான்றோர்
திறனுடையன் என்றுஉரைக்கும் தேசும் - பிறன்இல்
பிழைத்தான் எனப்பிறரால் பேசப்படுமேல்
இழுக்காம் ஒருங்கே இவை” (அறநெறி. 89) என்ற பாடலால் விளக்கிப் பிறன் மனை நாடினோர் அடையும் பழியை எடுத்துரைக்கின்றது.

## அறம் கூறும் முன்னெச்சரிக்கை

தண்டனை வழங்குவதை விட, கல்வி, சான்றோர் சேர்க்கை மற்றும் நல்வழிகாட்டல் மூலமாகக் குற்றங்களைத் தடுப்பதே முதன்மையானது என்பது பிற்கால அறநூல்களின் வலியுறுத்தலாகும். ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களும் நீதி நிர்வாகிகளும் சாதி, மதம், உறவு, பகை ஆகியவற்றைக் கடந்து நடுவுநிலைமையோடு செயல்பட வேண்டும் என்பதையும் பிற்கால அற இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன.

## நடுவுநிலை

சமூகத்தில் நியாயம் எது என்று ஆராய்ந்து, அதன்படி நடக்கும் தன்மை அனைவருக்கும் அவசியம். சமுதாயத்தில் உள்ள பகைவர் நண்பர் அறிந்தோர் அறியாதோர் எனப் பல்வேறு மக்களோடு சமுதாயத்தில்

உள்ளோர் வாழவேண்டியிருப்பதால் நடுவுநிலையோடு சிந்தி;க்கும் இயல்பும் அதனைக் கொள்கையாகக் கொண்டு வாழ்தலும் அவசியம்.

பிற்கால அறஇலக்கியங்கள் நடுவுநிலை தவறுவதால் ஏற்படும் விளைவுகளைக் குறித்து எச்சரிக்கின்றன. ஏழ்மையில் வாழும் பெண்களின் வழக்காக இருப்பினும் அதனை நன்கு ஆராய்ந்து நீதி வழங்க வேண்டும். அப்படி ஆராயாமல் ஒருதலைப் பட்சமாக தீர்ப்பு வழங்கினால் உறவினர்களை இழந்து கண்கள் குருடாகி உலகில் வருந்துவர் என்பதை,

“ஓரமே சொல்வா ராகி லோங்கிய கிளையு மாண்டு
தீரவே கண்ணி ரண்டும் தெரியாது போவோர் தாமே” (விவேக. 69)

என்று கூறுகின்றது.

மாயூரம் வேதநாயக பிள்ளையின் 'நீதிநூல்' - நவீனச் சட்டவியல் தொடர்பு: பிற்காலத்தில் எழுதப்பட்ட வேதநாயக பிள்ளையின் நீதிநூல், அரசனின் இயல்பு, குடிமக்களின் இயல்பு ஆகியவற்றை அறப்பூர்வமான பார்வையில் அணுகுகிறது.

## சீர்திருத்தக் கோட்பாடு

அதிகார வர்க்கம் எளியோரைச் சுரண்டுவதைத் தடுத்தலும், சமுதாயத்தில் வறிய நிலையில் உள்ளோருக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்தலும் சமூக நீதியின் முக்கியக் கூறுகளாகச் சுட்டப்படுகின்றன.

பிற்கால அற இலக்கியங்கள் மனிதனை முற்றிலும் அழிக்கும் தண்டனையை விட, குற்றவாளியைச் சீர்திருத்தும் வழிகாட்டல்களையே முன்னிறுத்துகின்றன.

அச்சமும் ஒழுக்கமும்: தண்டனை என்பது சமுதாயத்திற்கு ஒரு எச்சரிக்கையாகவும், குற்றவாளியின் குற்ற உணர்வைப் போக்கி நல்வழிப்படுத்தும் கருவியாகவும் அமைய வேண்டும்.

பிற்கால அற இலக்கியங்கள் வெறும் சமயச் சார்புடைய அல்லது தனிமனித ஒழுக்க நூல்கள் மட்டுமல்லாமல், அவை சமூக அமைப்பையும் நீதி நிருவாகத்தையும் கட்டியெழுப்பிய வழிகாட்டிகளாகத் திகழ்ந்துள்ளன.

பிற்கால அறநூல்களில் சுட்டப்படும் குற்றத் தடுப்பு முறைகள், நடுவுநிலை நீதி நிர்வாகம், எளியோர்க்கான சமூக நீதி ஆகியவை இன்றைய நவீனச் சட்ட அமைப்பிற்கும், குற்றவியல் ஆய்வுகளுக்கும் (Criminological Studies) பெரிதும் பொருந்துவனவாக உள்ளன.

சங்க கால நீதி நெறிகளின் தொடர்ச்சியாகவும், சமகாலச் சட்டச் சிந்தனைகளின் வித்தாகவும் பிற்கால அற இலக்கியங்கள் விளங்குகின்றன என்பதை இக்கோட்பாட்டு ஆய்வு உறுதி செய்கிறது.

## துணைநூற் பட்டியல் (References)

1. ஆசிரியர் குழு, நீதிநூற் கொத்து, கழக வெளியீடு, சென்னை, 1964.
2. இராசகோபாலன், நீதிநூல் மாலை, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 2003.
3. ஐயன்பெருமாள் கோனார், தமிழ்ச் செல்வம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 2008.
4. நமச்சிவாயர். கா(ப.ஆ), நீதிநூல்கள் (மூன்றாம் தொகுப்பு), வெளியிடுவோர்-எம். கலைவாணன், சென்னை, 2006.

5. புலவர் குழந்தை, நீதிக் களஞ்சியம், சாரதா பதிப்பகம், சென்னை, 2009.
6. மாணிக்கனார். வ. சுப (உ.ஆ), நீதிநூல்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1991.
7. மெய்யப்பன். ச(ப.ஆ), புதிய ஆத்திசூடி 11, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2012.
8. கதிர் முருகு, பிற்கால நீதி இலக்கிய வரலாறு, நாம் தமிழர் பதிப்பகம், சென்னை, 2010.
9. கவிதா ராணி. அ, அறமும் அறநெறிச் சிந்தனைகளும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2013.
10. வரதராசன். மு, அறமும் அரசியலும், பாரிநிலையம், சென்னை, 2010.